2013 மே 3]

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 2001–2005 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்திலேயே சீலியம்பட்டி ஊராட்சியிலேயே கால்நடை துணை மருத்துவமனை அமைக்கப்பட்டது. அதன் பின்பு வந்த தி.மு.க. ஆட்சி அதை அகற்றிவிட்டது. அதன்பின்பு தற்போது அமைத்துக் கொடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 390, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

390—

சமுதாயக் கூடம்

***11746—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆர். வேலூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆர். வேலூர் கிராமத்தில் ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் கட்டத் தேவையான இடம் இருப்பின், நிதி நிலைமைக்கு ஏற்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு அம்மா

அவர்களின் ஆலோசனையைப் பெற்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உடுமலைப்பேட்டை வட்டத்தில் ஆர்.வேலூர் கிராமத்தில் 1,698 மக்கள் வசிக்கிறார்கள். அப்பகுதியில் 749 ஆதி திராவிட மக்கள் வாழ்கின்றார்கள். அந்தப் பகுதியில் S.F. No. 170 சி என்ற இடத்தில் 90 சென்ட் நிலம் உள்ளது. அந்த நிலத்திலே அரசு விவசாய உலர்களம் அமைக்கப்பட்டிருக்கும் இடம் நிலம் போக மீதம் 30 சென்ட் இடம் இருக்கிறது. அந்தப் பகுதியில் அதிகமாக வாழ்கின்ற அருந்ததியர் வகுப்பைச் சார்ந்த மக்களுக்கு அரசு மூலமாக சமுதாயக் கூடம் இந்த ஆண்டே கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

அதோடு, என்னுடைய தொகுதியில் கணக்கம்பாளையம், கனியூர், பூலாங்கிணறு, உடுக்கம்பாளையம் போன்ற இடங்களில் உள்ள சமுதாயக் கூடங்கள் பழுதடைந்துள்ளன. அவற்றையும் புதுப்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் குடியிருப்புகளிலுள்ள ஆதி திராவிடர் இல்லத் திருமணங்கள், சமுதாய விழாக்கள், கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக ஒவ்வொரு வருடமும் தமிழ்நாட்டில் 10 சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 2011–2012 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகமாக வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளில் ரூ.100 இலட்சம் செலவில் 10 சமுதாயக் கூடங்களும், 2012–2013 ஆம் ஆண்டில் 10 சமுதாயக் கூடங்களும் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி*

2013 மே 3]

அம்மா அவர்கள் ஆணையிட்டு, சமுதாயக் கூடம் ஒன்றிற்கு தலா ரூ.15 இலட்சம் வீதம் 10 சமுதாயக் கூடங்களை ரூ.150 இலட்சம் செலவில் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

சமுதாயக் கூடங்கள் கட்ட நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் ஏற்கெனவே அனைத்து மாவட்டங்களிலிருந்து வரப்பெற்றுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைக்கொண்டு எல்லா மாவட்டங்களிலும் சமுதாயக் கூடங்கள் கட்டிக் கொடுக்க முடியாத நிலையுள்ளது. இருப்பினும் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆர்.வேலூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிடர் காலனியில், ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, தேவையின் முக்கியத்துவம், சமுதாயக் கூடம் கட்ட இடவசதி மற்றும் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் சமுதாயக் கூடம் கட்டித் தர மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச்சென்று, அப்பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வரும் என்று கூறியமைக்கு நன்றியைக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாதனூர் ஒன்றியத்திற்குட்பட்ட அகரம் பஞ்சாயத்தில் 15,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றார்கள். அதில் பெரும்பாலோர் ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அப்பகுதியில் ஒரு சமுதாயக் கூடம் வேண்டுமென்று அப்பகுதி மக்கள் நீண்ட வருடங்களாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே

ஒரு சமுதாயக் கூடம் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் அதிகமாக ஆதி திராவிடர்கள் வசிப்பதாகக் கூறியிருக்கிறார்கள். வருடத்திற்கு 10 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்குத்தான் நிதி ஒதுக்கப்படுகிறது. கோரிக்கைகள் நிறைய வருகின்றன. அதனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, இடம் இருப்பின், நிதிநிலைக்கேற்ப வரும் ஆண்டுகளில் இப்பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மக்களின் அட்சய பாத்திரமாக அவர்களுக்கு அற்புதமான திட்டங்களைத் தந்து ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எங்களது சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எருக்கூர் ஊராட்சியில் இந்து ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிப்பதால் அவர்கள் சுப நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஏதுவாக சமுதாயக் கூடம் அமைத்துத் தர மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகப்படியான உறுப்பினர்களிடமிருந்து சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு நிதி கேட்கப்படுகிறது. இருப்பினும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று இந்த நிதி ஆண்டு கூடுதல் நிதி*

பெற்று உறுப்பினர்கள் கேட்கின்ற இடங்களிலெல்லாம் சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 391, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

391—

நூலகம்

***20568 திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியிலுள்ள சீனிவாசராவ் நினைவு மண்டபத்தில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியிலுள்ள தியாகி பி. சீனிவாசராவ் நினைவு மண்டபத்தில் நூலகம் அமைக்கும் கருத்துரு தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1910 ஆம் ஆண்டு கர்நாடகாவில் பிறந்த திரு. பி. சீனிவாசராவ் அவர்கள் 1930, 1931 ஆம் ஆண்டுகளில் சென்னைக்கு